LIBRARY
5 - DEC 1962
STATE LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY.

Monday, 28th August 1961.

The House met in the Assembly Chamber, Fort St. George, at half past eight of the clock, the Deputy Speaker (SRI B. BHAKTAVATSALU NAIDU) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

Pumpset (electricity charges)

*** 1371 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN:** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயத்திற்கு பம்பு செட்டு வைத்து உபயோகப் படுத்தும் விவசாயிகளின் நிலத்தின் பாதுகாப்புக்கும் அவர்களின் தற்காப்புக்காகவும் மாலை முதல் காலை வரை எரியும் 60 வாட் பல்பு ஷெட்டு டாப் லைட்டுக்கு சார்ஜு உண்டா அல்லது இலவசமா?

(இ) அப்படி சார்ஜு இருந்தால், அதை நீக்குவதற்கு உத்தேசமுண்டா?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Agricultural consumers are allowed the concession of utilising from the energy supplied to them for agricultural purposes lighting up to 50 watts per 1,000 watts of connected motive power only for lighting in and around the pump room, farm house and cattle yard. If the top-light referred to is on the pump room or farm house, it will come under the above concession. The energy consumed by this light is not charged separately but payment is made by the party at the agricultural rate, for the supply will cover the limited energy for lighting also.

(*b*) As no separate charge is levied for the lighting consumption, the question of removing the charge does not arise.

SRI V. K. KOTHANDARAMAN: ஸார், பலவிதத்திலே விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருப்பதற்காக வேண்டித்தான் டாப் லைட் போடப்படுகிறது. ஆகவே, விவசாயிகளினுடைய பாதுகாப்பை முன்னிட்டு ஒரு மாதத்தில் எத்தனை யூனிட் ஏற்படுகிறதோ அத்தனையையும் இலவசமாக அனுமதிக்கும் யோசனை உண்டா?

THE HON. SRI V. RAMAIAH: இலவசமாக அனுமதிக்கும் உத்தேசம் ஒன்றும் கிடையாது. அக்ரிகல்சரல் டாரிப்படிதான் அந்த லைட்டுக்கு வாங்குகிறார்கள். அது விவசாயிகளுக்கு ஒரு சாதனம்.

[28th August 1961

SRI S. M. ANNAMALAI : கனம் அமைச்சர் அவர்கள் விவசாயத்திற்குத் தாப்படுகிற அதே சார்ஜை வசூல் செய்ய வேண்டுமென்பதாகச் சொன்னார். அந்த விவசாயிகள் ஒரு லைட்டுக்கு மேல் இன்னொரு லைட் வேண்டுமென்று சொன்னால் அதைப் போட்டுகொள்வதற்கு ஆட்சேபனை செய்கிறார்கள். ஏழு நையா பைசா வசூல் செய்துகொள்ளட்டும், ஆனால் மூன்று நான்கு லைட் போட்டுக்கொள்ள அனுமதிப்பார்களா?

THE HON. SRI V. RAMAIAH : அனுமதிக்கப்படுவதில்லை.

SRI M. KALYANASUNDARAM : பிரச்சனை இதுதான். சார்ஜைக் குறைக்க வேண்டுமா, வேண்டாமா என்பது அல்ல. அக்ரிகல்சரல் டாரிப்தான் இருக்கவேண்டும். அப்படி வசூல் பண்ணுவதே சரி. ஆனால் 40 வாட்சுக்கும் அதிகமாக லைட் வேண்டியிருப்பதனால் இதை அதிகரிக்க ஒன்றிரண்டு விளக்குகள் கூடப் போட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : இதுவரைக்கும் இதுபோன்ற ஒரு பிரச்சனை கவனிக்கப்படவில்லை. இப்போது கொடுப்பதை அதிகமாகக் கொடுப்பது மின்சார போர்டுதான் கவனிக்க வேண்டும். இப்போது இருக்கும் நிலைமையில் அது சரியாக இருக்காது என்று நினைக்கிறேன்.

SRI V. SUBBIAH : இரவு நேரங்களில் விவசாயக் களத்தில் 100 வாட் பல்பு போட்டுக்கொடுத்து அதற்காவது குறைந்தபட்ச பணம் வசூலிக்கப்படுமா?

THE HON. SRI V. RAMAIAH : அப்படி ஒன்றும் யோசனை இல்லை.

Co-operative Motor Transport Societies

* 1384 *Q.*—**SRI V. K. KOTHANDARAMAN :** கனம் மின்சார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் பஸ்களை நடத்த அனுமதிக்கப்படுகின்றனவா?

(இ) ஆமென்றால், நம் ராஜ்யத்தில் எங்கெங்கே அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) Permits to run transport services were granted to Co-operative Motor Transport Societies in the districts of North Arcot, Tiruchirappalli and Tirunelveli.

Headmasters (Pension)

DEPUTY SPEAKER : As the hon. Member, who gave notice of question No. 1401 is not in his seat, the question and answer will be printed in the proceedings.